(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | **SC Case No.**8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW12 திருமதி.எழிலரசி** |
| Father's Name/ Husband name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | காவல் ஆய்வாளர் கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 03.07.2025

**<u>எதிரி ஆஜரில் உள்ளார்.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2021 ம் வருடம் கஞ்சனூர் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது அனந்தபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.செந்தாமரை கண்ணன் என்பவர் அணையேரி கிராமம் பாஷா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.437/2021 சட்ட பிரிவுகள் 294 பி, 324 இதச வின் படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வட்ட ஆய்வாளராகிய நான் பாதுகாப்பு பணியில் சென்றிருந்ததால் உயர்அதிகாரி மற்றும் என்னுடைய அறிவுறுத்தலின் பெயரில் அன்றைய தினமே சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் அந்தோணிராஜ்ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் சம்பவ இடத்திலிருந்து சுமார் 78 செ.மீ X 18 எம்எம் அளவு கொண்ட கவுபார் ஆணிபிடுங்கும் ராடு ஒன்றையும் சுமார் 88 செ.மீ நீளமுள்ள மரக்கட்டை ஒன்றையும் விசாரணையின் போது புகார் தாரர் ஆஜர் செய்ததை கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்ற பாதுக்காப்பிற்கு அனுப்பியுள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.6 குறியீடு செய்யப்படுகிறது. இரும்பு ராடு அ.சா.பொ.1 ஆகவும், மரக்கட்டை அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின் மேற்கண்ட வழக்கு கோப்பை 13.09.2021 அன்று நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரணை செய்ததில் அவரிடம் சொன்னதையே என்னிடமும் சொன்னதால் மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும் சாட்சிகள் பாஷா, பாரூக், ஏழுமலை, ஆஜிரா, நடராஜ், பிரேமா, ஷபானா, ரவி, சரவணன், அந்தோணிராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி நீதிமன்ற உத்தரவின் பேரில் முன் பிணையில் சென்றதால் அவரை கைது செய்ய இயலவில்லை. பின் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த செஞ்சி அரசு மருத்துவமனை மருத்துவர் மரியம் ஜெமிலம் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து காய சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கின் காயம் பட்ட நபருக்கு விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிடிஸ்கேன் செய்த மருத்துவர் மனோஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு.செந்தாமரை செல்வன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து அரசு வழக்கறிஞர் கருத்துரை பெற்று 26.10.2021 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

## குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து புகாரோ வாக்குமூலமோ பெற்றோமா என்றால் காயம்பட்டவரிடம் 13.09.2021 வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அவரது தந்தை புகார் கொடுத்துள்ளார். வழக்கில் புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் 11.09.2021 அன்று நடந்ததாக துலங்குகிறது. அ.சா.1 புகாரை எந்த தேதியில் கொடுத்தார் என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் நேரில் கண்ட சாட்சிகள் பெயர் எதுவும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் பெயர் குறிப்பிட்டு சொல்லப்பவில்லை. அ.சா.1 சம்பவத்தை நேரில் கண்டவர் இல்லை என்றால் சரிதான். காயம் பெற்றவர் முதலில் அனந்தபுரம் ஆரம்ப சுகாதார மையத்திற்கு சென்றுள்ளார் என்றால் சரிதான். அங்கு சிகிச்சை எதுவும் பெறவில்லை. எனில் அனந்தபுரம் ஆரம்ப சுகாதார மையத்தில் காயம்பட்டவர் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக சொன்னால் அது தவறு என்றால் சரிதான். அனந்தபுரம் ஆரம்ப சுகாதார மையத்திலிருந்து காயம்பட்டவர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்துள்ளார் என்றால் அங்கு சிகிச்சை அளிக்கப்படாததால் செஞ்சி மருத்துவமனைக்கு வந்தார். அனந்தபுரத்தில் சிகிச்சை அளிக்கும் வசதி இல்லை என்பதாக எனது விசாரணையில் எங்காவது துலங்குகிறாதா என்றால் பாருக் வாக்குமூலத்தில் அவ்வாறு சொல்லியுள்ளார். செஞ்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று

பின் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளாரா என்றால் ஆமாம். செஞ்சி மருத்துவமனையில் 11.09.2021 அன்று பிற்பகல் 3.45 மணிக்கு பாரூக் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளாரா என்றால் சரிதான். அவ்வாறு விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது விசாரணையில் விழுப்புரம் அரசு மருத்துவமனை மருத்துவர் மனோஜ் 11.09.2021 அன்று பகல் 2.45 மணிக்கு பாரூக் சிகிச்சைக்காக வந்தார் என்று சொல்லியுள்ளரா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நேரம் குறிப்பிடப்பட்டதில் தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது. தட்டச்சு பிழை குறித்து நான் இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் பின்புறம் உள்ள காயச்சான்றில் மருத்துவர் ஜிப்மர் மருத்துவமனை டிஸ்ஜார்ஜ் கருத்துரையின் படி அவரது மூளையில் பாதிப்பு எதுவும் கண்டறியபடவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஜிப்மர் மருத்துவமனை சிடிஸ்கேன் எடுத்ததாக சொல்லும் மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. விழுப்புரம் அரசு மருத்துவமனை மருத்துவர் மனோஜ் என்பவர் எடுத்தாக சொல்லும் சிடிஸ்கேன் ரிப்போர்ட்டையோ அவரால் வழங்கப்பட்ட காயச்சான்று எதையுமோ வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வழக்கில் அனைத்து சாட்சிகளையும் உதவி ஆய்வாளர் தான் விசாரணை செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் வரைபடம் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் தான் தயார் செய்துள்ளார் என்றால் சரிதான். நானும் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். வழக்கு சம்பவத்தில் எதிரி அ.சா..2 ஆல் தாக்கப்பட்டு காயமுற்றார் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் செஞ்சி அரசு மருத்துவமனை சென்று எதிரியிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றாலும் அதை வழக்கில் மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினமே நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் வைத்து பாரூக் விடம் ஒரு புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றாலும் அதை வழக்கில் மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அதை மறைத்து அ.சா.1 ல் அரசியல் பின்புலத்தால் பின்னிட்டு வழக்கு புகாரை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் வழக்கு சொத்துக்கள் என்னால் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் கைப்பட்டதாக வழக்கில் மிகை படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும்.அ.சா.2 தான் எதிரியை அடித்துள்ளார் என்றாலும் சரியல்ல.